**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.140/2016
Prosecution witness.03

| | |
|---|---|
| பெயர் : அழகுமலை | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21st day of February 2025.

21.02.2025

(எதிரிகள் 1 மற்றும் 3 ஆஜர் இல்லை. 1 மற்றும் 3ம் எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக காலை 10.00 மணியளவில் தேதி, மாதம் நினைவில் இல்லை. 1ம் எதிரி அர்ச்சுணன், இறந்துபோன 2ம் எதிரி முத்துவேல் மற்றும் 1ம் எதிரியின் மகன் 3ம் எதிரி சந்திரஜித் ஆகியோர் வந்து அ.சா.2 கரந்தமலையை சத்தம்போட்டுக்கொண்டிருந்தார்கள். நாங்கள் சென்று சண்டையை விலக்விட்டு சென்றுவிட்டோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) சம்பவம் நடந்து எவ்வளவு நேரம் கழித்து நான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சுமார் 30 நிமிடங்கள் கழித்து தான் சென்றேன். அவர்கள் சத்தம்தான் போட்டார்கள் என்றால் கைகளப்பு நடந்தது. யார் யாரை அடித்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் 3 எதிரிகளும் சேர்ந்து கரந்தமலையை தாக்கிவிட்டார்கள். சம்பவம் நடக்கும்போது அந்த இடத்தில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் 3 பேர் தான்

இருந்தோம் பின்னர் மற்ற நபர்கள் வந்தார்கள். அ.சா.2 கரந்தமலை எனது பெரியப்பா மகன் ஆவார். போலிசார் வழக்கு சம்பந்தமா என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் ஞாபகமில்லை.

2) அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் எனது உறவினர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் எந்தவிதமான சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.140/2016
Prosecution witness.04

| | |
|---|---|
| பெயர் : ஜெயராஜ் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21st day of February 2025.

21.02.2025

(எதிரிகள் 1 மற்றும் 3 ஆஜர் இல்லை. 1 மற்றும் 3 ம் எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். 14.07.2012 ம் தேதி அ.சா.2 கரந்தமாலை என்னிடம் விறகுகளை விற்றார். அதனால் நான் விறகுகளை வெட்டுவதற்காக முட்களை அகற்றிக்கொண்டிருந்தேன். அப்போது 1ம் எதிரி அர்ச்சுனனும், 1ம் எதிரியின் மனைவியான இறந்துபோன 2ம் எதிரி ஆகியோர் வந்தார்கள். நான் வெளியூர் என்பதால் 1ம் எதிரி அர்ச்சுனனின் மனைவி பெயர் தெரியவில்லை. வேறு நபர்கள் யாரும் வரவில்லை. 1ம் எதிரி அர்ச்சுனனும், 1ம் எதிரியின் மனைவியான இறந்துபோன 2ம் எதிரியும் என்னிடம் வந்து விறகுகளை வெட்டகூடாது என்று சொன்னதும் நான் வெட்டவில்லை. விறகுகளை வெட்டாமல் நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். சம்பவம் பற்றி வேறு எதுவும் எனக்கு தெரியது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**நீதிமன்ற கேள்வி:** இவ்வாறு தான் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று யாரும் கட்டாயமோ, மிரட்டலோ, தூண்டுதலோ விடுத்தார்களா என்றால் இல்லை.

(சாட்சி அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்ததால் அவரை பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யபடுகிறார்).

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

**1)** கடந்த 22.02.2015 ம் தேதி காலை 10.00 மணியளவில் நான் விறகு வெட்டும்போது இவ்வழக்கின் 3 எதிரியும் சம்பவ இடத்திற்கு வந்தார் என்றால் சரியல்ல. என்னை 1ம் எதிரி அர்ச்சுனன் அடித்து கீழே தள்ளிவிட்டு கத்திக்கம்பால் ஓங்கி வெட்டியபோது நான் விலகிக்கொண்டேன் என்றால் சரியல்ல. மேலும் 1ம் எதிரி அர்ச்சுனன், அசா.2 கரந்தமலையை தேவிடியா என்று கூறினார் என்றால் சரியல்ல.

2) அ.சா.2 கரந்தமலையை அடித்ததை அ.சா.3 தடுத்தபோது 3ம் எதிரி அவரது அம்மா இறந்துபோன 2ம் எதிரி முத்துவேலின் கையில் இருந்த அருவாளை பிடிங்கி ஓங்கி வெட்ட வந்தார் என்றால் சரியல்ல. 1 முதல் 3 எதிரிகள் சேர்ந்து அசா.1 மற்றும் அ.சா.2 யை மாறிமாறி அடித்தும், வெட்டி கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல.

**2.** 1ம் எதிரி அர்ச்சுனன் அசா.2 யை தேவிடியா நீ ஓடிவிடு இல்லாவிட்டால் வெட்டிக்கொன்று விடுவோம் என்று கையில் வைத்திருந்த கத்திக்கம்பை தூக்கிகாட்டி மிரட்டினார் என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் பார்த்தாக இளஞ்செம்பூர் போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரிகளுடன் செய்துகொண்ட சமாதானத்தால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இல்லை.